1979 மார்ச் 19]

மில்லியன் யூனிட்ஸ் என்பது வேறு. விவசாயப் பம்ப் செட்டுகளை பொறுத்தவரை மின்சாரம் கொடுப்பதைப் பொறுத்து இது எப்போதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஸ்டாகரிங் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு கோதண்டராமன் அவர்கள் இது சம்பந்தமாக ஏற்கனவே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக் கிறேன்.

மாவட்ட வருவாய் அதிகாரிகள் பதவிகள்

* வினா எண். 460—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஐ. ஏ. எஸ். அதிகாரிகளைக் கூடுதல் கலெக்டர் என்ற பெயரில் மாவட்ட வருவாய் அதிகாரிகட்குப் பதிலாக நியமிக்கும் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம். ஐ. ஏ. எஸ். அதிகாரிகளைக் கூடுதல் கலெக்டர் என்ற பெயரில் மாவட்ட அதிகாரிகட்குப் பதிலாக மூன்று மாவட்டங்களில் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் கீழ்மட்டத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றி வரக் கூடியவர்கள் முறைப்படி பதவி உயர்வு பெற்று மேலதிகாரிகளாக வருவதற்கு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ள முறை பாதக மாக உள்ளதால் ஏற்கனவே இருந்த முறையையே அரசு அமலுக்குக் கொண்டு வருமா? ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1960-ல் 9 இடங் களில்தான் டி. ஆர். ஓ. பதவிகள் இருந்தன. இப்போது 46 இடங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. ஆகையால் அவர்களுக்குப் பதவி உயர்வுக்கான வாய்ப்பு அதிகம் என்ற அடிப்படையில் இதை மறு பரிசீலனை செய்யும் உத்தேசம் இல்லை.

திரு. எஸ். வி. இராமசாமி : ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை மாவட்டங்களில் வருவாய்த் துறை அதிகாரிகளாக நியமிப்பதால் அந்தத் துறையில் கீழிருந்து வரக்கூடியவர்களுக்கு வாய்ப்புகள் பாதிக்கப்படுகின்றன. ஐ. ஏ. எஸ். அதிகாரிகளும் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகளாகப் பணியாற்றுவதை 'இன்பீரியர்' ஆகக் கருதுகிறார்கள். இந்தக் குறைபாட்டைப் பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் ஏற்கனவே சொன்னேன், அவர்களுடைய பதவி உயர்வு வாய்ப்பு பாதிக்கப் படவில்லை.

திரு. க. சுப்பு : மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் சிலர் குற்றம் சுமத்தப்பட்ட பிறகும் அக்யூஸ்டு அப்ரூவராக மாறிய பிறகும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படாமல் பல்வேறு உயர்ந்த பதவிகளில் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். அதனால் நிர்வாகம் சீரழிந்து விடுகிறது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படி எங்கும் குறைபாடு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 461......

THIRU K. SUPPU : Point of order arising on the answer of the Hon. Minister.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு கேள்விக்குப் போய் விட்ட பிறகு எதுவும் கேட்க முடியாது, அதோடு விட்டு விடுங்கள்.

இல்மனைட் ஏற்றுமதி

* வினா எண். 461 —திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து இல்மனைட் என்ற தாதுப்பொருள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) இல்மனைட் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத் திலும், மேலும் கேரள மாகாணத்தில் கவரா என்னும் பகுதி யிலும் ''இண்டியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட்'' (Indian Rare Earths Limited) என்னும் மத்திய அரசாங்க நிறுவனத்தால் தோண்டி யெடுக்கப்படுகிறது.

இந்த நிறுவனம் இல்மனைட் எனப்படும் தாதுப்பொருளை திருவாளர்கள் தாரங்கதாரா கெமிக்கல்ஸ் லிமிடெட் என்ற நிறு வனத்திற்கு விற்றுவிடுகிறது. திருவாளர்கள் தாரங்கதாரா